என்பதைக் கடமையாகக்கொண்டு, ஆளுநர் உரையில் இருக்கிற குறைகளையும் நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம்' என்று கலைஞர் அவர்கள் பேசியிருக்கிறார்.

அண்ணா அவர்கள், கலைஞர் அவர்கள் காட்டிய அந்தப் பாதையில் எனக்குப்பட்ட குறைகளைச் சொல்ல வேண்டிய கடமை உணர்வோடு, நல்ல எண்ணத்தில், சிலவற்றை எடுத்து வைத்திருக்கிறேன். அவற்றைச் சரி செய்வதும், அலட்சியப்படுத்துவதும் ஆளுங்கட்சியினுடைய பக்குவத்தைப் பொறுத்தது என்று கூறி, இந்த வாய்ப்பைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில், ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்களையும், தமிழர் திருநாளாம் பொங்கல் நல்வாழ்த்துக்களையும்தங்களுக்கும்,அவையில் அமர்ந்திருக்கக்கூடிய அத்தனைபேருக்கும் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (9–1–2020), வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

24. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

25. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

2020 ஜனவரி 8]

26. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தணிக்கை அறிக்கை. [*1983* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *30/1983*) *80*(*9*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

27. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்தாறாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

28. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

29. 2018–2019 ஆம் ஆண்டிற்கான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS